செய்தி குறிப்பு எண்.178 நாள்: – 28.11.2006

# தமிழ்நாட்டில் கரும்புக்கு விலை நிர்ணயம்
# முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு.

2006–2007 சர்க்கரை ஆண்டில் 9 சதவிகிதம் பிழி திறனுள்ள ஒரு டன் கரும்புக்கு ரூபாய் 802.50 என்று மத்திய அரசு குறைந்த பட்ச விலையாக நிர்ணயம் செய்துள்ளது. தமிழக கரும்பு விவசாயிகள் நலனில் அக்கறை கொண்ட திராவிட முன்னேற்றக் கழக அரசு – மத்திய அரசு நிர்ணயம் செய்துள்ள குறைந்த பட்ச விலையை விடக் கூடுதலாக ரூபாய் 222.50 உயர்த்தி, 9 சதவிகிதம் பிழி திறன் உள்ள ஒரு டன் கரும்புக்கு மாநில அரசின் பரிந்துரை விலையாக ரூபாய் 1025 என்று நிர்ணயம் செய்து முதலமைச்சர் கலைஞர் அறிவித்துள்ளார். இந்த விலை உயர்வு, இந்த நடப்புக் கரும்பாண்டில் ஏற்கனவே கொள்முதல் செய்யப்பட்ட கரும்புக்கும் பொருந்துமாறு முன் தேதியிட்டு வழங்கப்படும்.

மேலும் 9 சதவிகிதம் பிழிதிறனுக்குக் கூடுதலாக உள்ள ஒவ்வொரு 0.1 சதவிகித பிழிதிறனுக்கும் டன் ஒன்றுக்கு ஒன்பது ரூபாய் ஊக்கத் தொகை (incentive) யாக வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

***

வெளியீடு:– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9